# யாழ்ப்பாணக் கல்வி வலயம்

## முதலாந்தவணைப் பரீட்சை - 2016

## சைவநெறி

234

**தரம்: 08**

சுட்டெண் :......................................

**நேரம்: 2.00 மணித்தியாலம்**

### பகுதி - I

❖ **மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01) மெய்ப்பொருளாக விளங்குபவர்
1) கடவுள் 2) மனிதர் 3) உறவினர் 4) தாய்

02) "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" எனக்கூறியவர்
1) உலகநாதர் 2) திருவள்ளுவர் 3) திருமூலர் 4) ஔவையார்

03) திரிகரணங்கள்
1) மெய், வாய்,கண் 2) மனம், மொழி, மெய்
3) சூரியன், சந்திரன், அக்கனி 3) பதி, பசு, பாசம்

04) தூலலிங்கம் எனப்படுவது
1) சிவலிங்கம் 2) பலிபீடம் 3) கோபுரம் 4) தூபி

05) ஆலயத்தில் ஜீவான்மாவைக் குறிப்பது
1) பலிபீடம் 2) கொடிமரம் 3) மூலஸ்தானம் 4) நந்தி

06) மனிதரால் தாபிக்கப்பட்ட லிங்கம்
1) சுயம்புலிங்கம் 2) கணலிங்கம்
3) தைவிகலிங்கம் 4) மானுடலிங்கம்

07) அர்ச்சனை முறையைத் தோற்றுவித்த வேதம்
1) இருக்கு 2) யசுர் 3) சாமம் 4) அதர்வணம்

08) விநாயகருக்குரிய அர்ச்சனை
1) சண்முகார்ச்சனை 2) பஞ்சமுக அர்ச்சனை
3) ...சக்தி அரச்சனை 4) மந்திரபுஸ்பாஞ்சலி

09) தமிழ் வேதம் எனப்படுவது
1) திருமுறைகள் 2) திருக்குறள் 3) வேதங்கள் 4) ஆகமங்கள்

10) மனிதனை இயக்குவது
1) மூளை 2) மனம் 3) உடல் 4) கட்டளை

11) "கொதிக்கும் நெஞ்சைக் குளிர்மொழி அணைக்கும்" எனக்கூறியவர்
1) ஸ்ரீலஸ்ரீஆறுமுகநாவலர் 3) சுவாமி விவேகானந்தர்
3) விபுலானந்தர் 4) திருமூலர்

12) வேதங்கள் மனித இலட்சியமாகக் கூறுவது
1) நீதி 2) நேர்மை 3) தர்மம் 4) உண்மை

13) பிறந்த நாளில் தவிர்க்க வேண்டியது
1) சிற்றுண்டி 2) பொங்கல்
3) மங்கல வாத்தியம் 4) வீண் ஆடம்பரம்

Education கல்வி அதியாபன

14) சமுதாய நன்மை, தனி மனத மேன்மை என்பவற்றுக்கு உதவுவது

1) விரதங்கள் 2) பண்டிகைகள்

3) கொண்டாட்டங்கள் 4) வீட்டு வழிபாடு

15) திருமாலுக்குரிய நட்சத்திரம்

1) திருவோணம் 2) திருவாதிரை 3) விசாகம் 4) ரோகிணி

16) மகாபலிச்சகக்ரவர்த்தியின் கர்வத்தை அடக்கியவர்

1) சிவன் 2) துர்க்கை 3) விநாயகர் 4) திருமால்

17) நவக்கிரகங்களில் முதன்மையானவர்

1) சந்திரன் 2) சூரியன் 3) சனி 4) இராகு

18) விநாயகர் கஜமுகாசுரனைச் சங்கரித்த ஆயதம்

1) பாசம் 2) அங்குசம் 3) தந்தம் 4) மோதகம்

19) சனீஸ்வரனின் தந்தை

1) சந்திரன் 2) சூரியன் 3) விஷ்ணு 4) பிரமா

20) உலகிற்கு பகவத்கீதையை அருளியவர்

1) அர்ச்சுனன் 2) வீமன் 3) கர்ணன் 4) கண்ணன்

(20x2= 40புள்ளிகள்)

## பகுதி - II

❖ **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

(01) பின்வரும் திருமுறைப்பாடல்களில் இரண்டை வரிக்கிரமாக எழுதிப் பாடியவர், தலம் என்பவற்றைத் தருக.

1) “சதுரம்மறைதான் துதிசெய்யும்.......”

2) “மண்ணில்நல்லவண்ணம்...............”

3) “பண்ணினேர் மொழியாள்............”

4) “குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற்.........”

(4+1+1x2=12புள்ளிகள்)

(02) “கோயிலில்லா ஊரிற் குடியிருக்கவேண்டாம்”

1) கோயில் என்ற சொல்லின் பொருள் யாது?

2) பரிவார தெய்வங்கள் என்றால் என்ன?

3) இயமம் என்பது யாது?

4) நியமப் பண்புகள் ஐந்து தருக.

(4x3=12புள்ளிகள்)

(03) “விழுமியங்களைக் கடைப்பிடித்து இன்பமாக வாழலாம்”

1) “விழுமியம்” என்றால் என்ன?

2) மாசற்ற மனதை எவ்வாறு பெறலாம்?

3) “இனியசொல்” என்பது யாது?

4) கல்வியை வழங்குபவை யாவை?

(4x3=12புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන

(04) "வாழ்வியற் சடங்குகள் வாழ்வை வளப்படுத்துகின்றன"

1) வாழ்வியற் சடங்குகள் ஐந்து தருக.
2) வாழ்வியற் சடங்குகள் எவற்றுக்கு உதவுகின்றன?
3) பிறந்த நாள் விழா என்றால் என்ன?
4) பிறந்த நாள் கொண்டாடும் ஒழுங்குமுறையதைத் தருக?

(4x3=12புள்ளிகள்)

(05) "பண்டிகைகள் வாழ்வை மகிழ்ச்சியாக்குகின்றன"

1) பண்டிகை என்றால் என்ன?
2) நீர் கொண்டாடும் பண்டிகைகள் எவை? அவற்றில் ஒன்றைக் கொண்டாடும் முறையைக் குறிப்பிடுக?
3) பண்டிகைகளைக் கொண்டாடுவதால் ஏற்படும் பயன்கள் எவை?
4) ஓணம் பண்டிகையுடன் தொடர்புடைய கதையைச் சுருக்கமாக எழுதுக?

(4x3=12புள்ளிகள்)

06) "விரதங்களைக் கடைப்பிடித்தால் இறையருள் கிட்டும்"

1) உமக்குத் தெரிந்த விரதங்கள் ஐந்து தருக.
2) புரட்டாதிச் சனி விரதத்தை அனுட்டிக்கும் முறையைத் தருக.
3) சிரார்த்த விரதம் என்றால் என்ன?
4) பிரதோஷ காலம் யாது?

(4x3=12புள்ளிகள்)

07) பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1) அர்ச்சனை
2) மனவடக்கம்
3) நமஸ்காரங்கள்
4) சொத்துகளைப் பேணல்

(4x3=12புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

Education
கல்வி
අධ්‍යාපන

# தரம் 6,7,8

# தமிழ்

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் தமிழ் பாட வகுப்புகள்.

✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**மாதக் கட்டணம்**

**850/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page